வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை - 2017

FWC

## Term Examination, July - 2017

| தரம் :- 12 (2018) | கணக்கீடு – I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- 1- 15 வரையுள்ள வினாக்களிற்கு சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
  16 - 25 வரையுள்ள வினாக்களிற்கு சுருக்கமான விடை எழுதுக.

(1) கணக்கீட்டின் பிரதான நோக்கம்

1) நிறுவனம் ஒன்றின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் கணக்குப் புத்தகங்களில் பதிதல்
2) நிறுவனம் ஒன்றின் கொடுக்கல் வாங்கல்களை பதிதல், வகைப்படுத்தல், சுருக்குதல் ஆகியன
3) முகாமையாளர்களிற்கு நிறுவனம் ஒன்றின் கொடுக்கல் வாங்கல்களின் விபரமான பகுப்பாய்வு ஒன்றினை வழங்குதல்
4) நிறுவனம் ஒன்றின் நிதிக்கூற்றுகளில் உள்ள தகவல்களை பகுப்பாய்வு செய்தல்
5) நிறுவனம் ஒன்றின் தகவல்களை அதனைப் பயன்படுத்துவோருக்கு தீர்மானம் மேற்கொள்வதற்காக வழங்குதல் (..................)

(2) பின்வரும் எண்ணக்கருக்களில் எது வருட முடிவில் உள்ள சரக்கிருப்பை கிரயத்தினதும் தேறிய தேறத்தக்க பெறுமதியினதும் ஆகக் குறைந்த பெறுமதியில் இனம் காண்பதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

1) அட்டுறு 2) கணக்கீட்டுக்காலம் 3) தோற்றத்திலும் கருத்து முக்கியத்துவம்
4) தேறல் 5) முன்னெச்சரிக்கை (..................)

(3) கணக்காய்வாளரினால் பின்வரும் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது

அ. வணிகத்தின் இலாப நட்டங்கள் உரிமையாளரின் உரிமைக்கு சீராக்கப்படுகின்றது
ஆ. கொடுக்கல் வாங்கல் ஒன்றின் சட்டத்தன்மையை விட அதன் பொருளாதார ரீதியான கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதி பதிவுக்கு உட்படுத்தல் மேற்கூறப்பட்ட இரண்டு கூற்றுக்களுடனும் தொடர்புடைய பொருத்தமான எண்ணக்கரு

1) இணைதல், பொருண்மை 2) தேறல் , முக்கியத்துவ எண்ணக்கரு
3) அலகுசார்எண்ணக்கரு, தோற்றத்திலும் கருத்து முக்கியத்துவம்
4) கால எண்ணக்கரு, பொருண்மை எண்ணக்கரு
5) இணைதல், தோற்றத்திலும் கருத்து முக்கியத்துவம் (..................)

(4) சுமதி நிறுவனம் 1.4. 2015 இல் 750 ரூபா மூலதனம் இட்டு வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் தகவல்கள் வருமாறு

| | 31.03.2016 | 31.03.2017 |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 800 | 1500 |
| மொத்த வருமானம் | 1000 | 1500 |
| மொத்த செலவுகள் | 1200 | 900 |

31.03.2016 இல் மொத்தப் பொறுப்பும் 31.03.2017 இல் உரிமையாண்மையும் முறையே

1) 250 ,1150 2) 800 , 1150 3) 250 , 1350 4) 800, 1350

5) 1000, 1150 (.................)

(5) வணிக நிறுவனம் ஒன்று மீள் விற்பனை நோக்கில் 400000ரூ கிரயமான பண்டங்களை கடனிற்கு கொள்வனவு செய்தது. இவற்றுள் 30000ரூ கிரயமானது பழுதடைந்து காணக்கட்டமையினால் அதனை வழங்குனருக்கு திருப்பி அனுப்பியது. வழங்குனருக்கு செலுத்த வேண்டிய நிலுவையை தீர்க்கும் பொருட்டு 360000 ரூபாவினைச் செலுத்தியது. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய மூல ஆவணங்கள் ஆவன.

1) பட்டியல், செலவுக்குறிப்பு, நாட்குறிப்புக் கைச்சாத்து
2) பட்டியல், செலவுக்குறிப்பு, கொடுப்பனவுக் கைச்சாத்து
3) பட்டியல் , வரக்குறிப்பு, கொடுப்பனவுக் கச்சாத்து
4) நாட்குறிப்புக் கைச்சாத்து, பட்டியல், வரவுக்குறிப்பு
5) பட்டியல், வரவுக்குறிப்பு, நாட்குறிப்புக்கைச்சாத்து (.................)

(6) கட்டுப்பாட்டுக் கணக்குகள் தொடர்பாக கணக்குப்பதிவாளர் ஒருவர் பின்வரும் கூற்றுக்களை முன் வைத்துள்ளார்.

அவற்றுள் சரியானவற்றைக் குறிப்பிடுக.

A. நாளேடுகளின் கூட்டுத்தொகையில் ஏற்படும் தவறுகள் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் பட்டியல் மீதியினை கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் இருந்து வேறுபடுத்தும்

B. நாளேடுகளில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் போது ஏற்படும் தவறுகள் கடன்பட்டோர். கடன்கொடுத்தோர் பட்டியல் மீதியினை கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் இருந்து வேறுபடுத்தும்

C. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எதிர்த்தீர்த்தலிற்கான பதிவு தவறான பக்கத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கும் போது கடன்பட்டோர் பட்டியல் மீதியானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை விட அதிகமாக இருக்கும்.

D. கசேட்டின் வரவுப்பக்க கழிவு நிரலினை மிகைபடக் கூட்டினால் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி கடன்பட்டோர் பட்டியல் மீதியை விட குறைவாக இருக்கும்

1) ABC 2) AB 3) BCD 4) CD 5) AD

(.................)

(7) இலாப நட்டத்தை சமமமாகப் பகிரும் அஜய், விஜய் பங்குடமையில் 31.03.2017 முடிவடைந்த வருடத்தில் இலாபப் பகிர்வின் பின்னர் பின்வரும் வழுக்கள் இடம் பெற்றமை தெரிய வந்தது.

1) அஜய் எடுப்பனவு செய்த 3000 ரூபா பெறுமதியான சரக்கிற்கு எதுவித பதிவுகளும் இடம் பெறவில்லை

2) விஜய் தனது சொந்தப்பணத்தில் இருந்து செலுத்திய வியாபாரத்திற்கான மின்கட்டணம் 2000 ரூபா அனது கணக்கேடுகளில் 200 ரூபா எனப் பதிவு செய்யப்பட்டு இருந்தது.மேற்படி வடுக்களைத்திருத்திய பின்னர் பங்காளர் இருவரது உரிமையில் ஏற்படும் தாக்கம் யாது?

| அஜய் | விஜய் |
|---|---|
| 1. 600 ரூபாவால் அதிகரிக்கும் | 600 ரூபாவால் குறைவடையும் |
| 2. 2400 ரூபாவால் குறைவடையும் | 2400 ரூபாவால் அதிகரிக்கும் |
| 3. 2400 ரூபாவால் குறைவடையும் | 2400 ரூபாவால் குறைவடையும் |
| 4. 3000 ரூபாவால் குறைவடையும் | 1800 ரூபாவால் அதிகரிக்கும் |
| 5. 3000 ரூபாவால் குறைவடையும் | 2000 ரூபாவால் அதிகரிக்கும் |

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 8 ம் வினாவிற்கு விடை தருக.

வணிக நிறுவன் ஒன்றின் கணக்கேடுகளில் இடம் பெற்ற தவறுகளும் விடுபாடுகளும் பின்வருமாறு

1) காப்புறுதிக்கட்டணத்திற்கான கொடுப்பனவு 15000 ரூபா காப்புறுதிக்கட்டணக் கணக்கில் 1500 ரூபா என செலவு வைக்கப்பட்டிருந்தது

2) இறுதியிருப்புக்கள் 12000 ரூபாவினால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது

3) கடன் கொடுத்தோனாகிய குமாரிற்கு செலுத்திய 8250 ரூபாவானது அவரது கணக்கில் தவறான பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.

(கட்டுப்பாட்டுக் கணக்குகள் பராமரிக்கப்படவில்லை எனக் கொள்க.)

(8) மேற்கூறப்பட்ட வழுக்களினால் பரீட்சை மீதியின் வேறுபாடாக அமைவது

1) வேறுபாடு எதுவும் இல்லை

2) வரவுப்பக்கம் 33000 ரூபாவால் குறையும்

3) செலவுப்பக்கம் 16500 ரூபாவால் அதிகரிக்கும்

4) செலவுப் பக்கம் 16500 ரூபாவால் குறைவடையும்

5) செலவுப் பக்கம் 33000 ரூபாவால் குறையும் (..................)

9ம், 10ம் வினாக்களிற்கு விடை அளிக்கும் போது பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொள்க. பங்குடமை ஒன்றின் பங்காளர்களான பாலா, ஜீவா என்போர் இலாப நட்டங்களை முறையே 5 : 3 எனப் பகிர்வர். 01.01.2016 இல் சுரேஸ் என்பவரை புதிய பங்காளராக சேர்த்துக் கொண்டனர். புதிய இலாப நட்டப் பகிர்வு விகிதம் 5 : 4 : 3 ஆகும். சுரேஸ் அனுமதிக்கும் பொருட்டு பங்குடமையின் மொத்த நன்மதிப்பு 600000 ரூபா என மதிப்பிடப்பட்டது.

(9) பாலா, ஜீவா என்போரது இழப்பீட்டு விகிதமாக அமைவது

1) 5 : 1 2) 3 : 2 3) 1 : 5 4) 5 : 3 5) 5 : 4

(..................)

(10) நன்மதிப்பு சீராக்கம் பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்க்கொள்ளும் போது பாலா, ஜீவா ஆகியோரது மூலதனக் கணக்கில் ஏற்படும் அதிகரிப்பு

1) 150000 , 50000 2) 93750 , 56250 3) 25000, 125000

4) 125000, 25000 5) 56250, 93750 (..................)

(11) செல்வா வணிகத்தில் 2017 மார்ச் மாதம் பின்வரும் கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அ. மார்ச் மாத கட்டிட வாடகை 8000 ரூபாவிற்கு பதிலாக கட்டிட உரிமையாளருக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.

ஆ. விளம்பரத்திற்கௌ வழங்கிய பொருட்களின் கிரயம் 5000 ரூபா

இ. கடனிற்கு விற்பனை 70000 ரூபா அவற்றின் கிரயம் 36000 ரூபா

மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல் நிகழ்வினால் மார்ச் மாதம் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் மொத்த செலவு

| வருமானம் | செலவு |
|---|---|
| 1. 78000 | 41000 |
| 2. 70000 | 41000 |
| 3. 75000 | 49000 |
| 4. 70000 | 36000 |
| 5. 78000 | 49000 |

12ம் 13 ம் வினாக்களிற்கு விடை அளிக்கும் போது பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக. 31.03.2017 இல் வரையறுக்கப்பட்ட லக்கி கம்பனி 60000 ரூபா கிரயமுள்ளதும் 42000 ரூபா திரண்ட பெறுமானத்தேய்வினைக் கொண்டதுமான இயந்திரம் ஒன்றை இது போன்ற இன்னோர் இயந்திரத்திற்காக அதே தினத்தில் பரிமாற்றம் செய்தது. பழைய இயந்திரத்தின் பரிமாற்று விலை அதன் முன்னொண்டு வரும் பெறுமதி என ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதிய இயந்திரத்தின் விலை 65000 ரூபா இதன் வேறுபாடு காசாக செலுத்தப்பட்டது.

(12) இவ் இயந்திரம் பரிமாற்றம் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் உண்மையானது

1) 18000 ரூபா நட்டம் 2) 18000 ரூபா இலாபம் 3) 23000 ரூபா நட்டம்

4) 5000 ரூபா நட்டம் 5) இலாபமோ நட்டமோ ஏழாத நிலை (..................)

(13) இப் பரிமாற்றம் காரணமாக முன்கொண்டு வரும் தொகையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு

1) 5000 ரூபா 2) 18000 ரூபா 3) 23000 ரூபா

4) 47000 ரூபா 5) 65000 ரூபா (..................)

(14) எல்லாக் காசு நடவடிக்கைகளையும் வங்கி மூலம் செய்யும் நிறுவனம் ஒன்றின் 2017 ஜனவரி மாதத்துடன் தொடர்பான தகவல்கள் வருமாறு

1) காசுப்புத்தகத்தின் வரவு மீதி 31.01.2017 290000 ரூபா வங்கிக் கூற்றினைப் பெற்றதன் பின்னர் தெரிய வந்தது.

அ. வைப்பிலிடப்பட்டது ஆனால் வசூலிக்கப்படாததுமான காசோலை 80000 ரூபா

ஆ. கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்காத காசோலை 40000 ரூபா

இ. நேரடி வைப்பு 30000 ரூபா

ஈ. சிலையான கட்டளை கடன் தவணைப்பணம் 10000 ரூபா

31.01.2017 வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி

1) 250, 000 2) 270 , 000 3) 290, 000

4) 310, 000 5) 320, 000 (..................)

(15) நிறுவனம் ஒன்று குறிக்கப்பட்ட மாதம் ஒன்றில் இயந்திரம் ஒன்றை பராமரிப்பதற்கு 8000 ரூபா செலுத்தியது. இக்கொடுக்கல் வாங்களில் தாக்கமானது கணக்கீட்டுச் சமன்பாட்டில் பின்வருவனவற்றுள் எவ்வாறு காட்டப்படும்.

1) சொத்துக்களில் 8000 ரூபா குறையும் பொறுப்புக்களில் 8000 ரூபா குறையும்

2) சொத்துக்களில் 8000 ரூபா குறைய பொறுப்புக்கள் 8000 ரூபா அதிகரிக்கும்

3) சொத்துக்களில் 8000 ரூபா குறைய உரிமை 8000 ரூபா குறையும்

4) சொத்துக்களில் 8000 ரூபா குறைய உரிமை 8000 ரூபா அதிகரிக்கும்

5) சொத்துக்களில் 8000 ரூபா குறைய சொத்துக்கள் 8000 ரூபா அதிகரிக்கும் (..................)

***16 - 25 வரையிலான வினாக்களிற்கு சுருக்கமான விடை தருக.***

(16) நிதிக்கூற்றின் மூலங்கள்

1. ................................ 2. ...............................3. .............................. 4. .............................. 5. ................................

(17) பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் இலாப நோக்கமற்ற நிறுவனம் ஒன்றின் கொள்ளலகொடுத்தல் கணக்கற்கும் வருமானச் செலவுக் கணக்கிற்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

| | கொள்ளல் கொடுத்தல் கணக்கு | வருமானம் செலவு கணக்கு |
|---|---|---|
| 1. தயாரிப்பதன் நோக்கம் | .................................................... | ........................................ |
| 2. தயாரிப்பின் அடிப்படை | ..................................................... | ........................................ |

(18) பின்வரும் தகவல்கள் பெறுமதி சேர்வரி பதிவு செய்யப்பட்ட வியாபாரம் ஒன்றினால் 31.03.2017 வாங்கப்பட்ட இயந்திரம் தொடர்பானது

பெறுமதி சேர் வரி உட்பட செலுத்திய விலை 777000

துறைமுகத்திலிருந்து வியாபார இடத்திற்கு கொண்டு வருவதற்கான போக்குவரத்து செலவு 40000 ரூபா.

இடத்தை தயார்ப்படுத்துவதற்கான கிரயம் 200000 ரூபா

இயந்திர பராமரிப்பு செலவு 30000 ரூபா

இயந்திர பரிசோதனைச் செலவு 10000 ரூபா

பெறுமதிசேர்வரி 11 வீதம்

LKAS 16 இன் படி இயந்திரத்தின் கிரயம் ........................................................

(19) பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடையதாகும். அவற்றைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களிற்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| நேர்ச்செலவு | 11000 | ரூபா |
| ஆரம்பக் குறைவேலை | 7000 | ரூபா |
| உற்பத்திக் கிரயம் | 100000 | ரூபா |
| மொத்த உற்பத்தி மேன்தலை | 20000 | ரூபா |
| ஆரம்ப மூலப்பொருள் | 22000 | ரூபா |
| இறுதிக் குறைவேலை | 2000 | ரூபா |
| இறுதி மூலப்பொருள் | 16000 | ரூபா |

முதற்கிரயம் உற்பத்திக் கிரயத்தின் $\frac{3}{4}$ பங்காகும்.

கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருளின் பெறுமதி யாது?...................................................................

(20) பின்வரும் தரவுகள் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் 2017 மார்ச் 31 இல் முடிவுற்ற கணக்காண்டிற்குரியதாகும்.

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 250000 | ரூபா |
| மூலப்பொருள் இருப்பில் அதிகரிப்பு | 50000 | ரூபா |
| நேர்க்கூலிக்கிரயம் | 50000 | ரூபா |
| புத்துருவாகும் வேலை குறைவு | 15000 | ரூபா |
| தனியுரிமைக்கட்டணம் | 30000 | ரூபா |
| உற்பத்திமேன்தலைக்கிரயம் | 70000 | ரூபா |
| பூர்த்தி பண்ட அதிகரிப்பு | 30000 | ரூபா |
| விற்பனை வருமானம் | 450000 | ரூபா |

31.03.2017 முடிவுற்ற ஆண்டிற்கான மொத்தலாபம் என்ன?.........................................................................

The National e-learning Portal for The General Education

(21) லயன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 2017.03.31 முடிவுற்ற ஆண்டில் பிரித்தெடுக்கப்பட்ட தரவுகள் வருமாறு

01.04.2016 வருமதிச்சந்தா 20000 ரூபா முற்பணச்சாந்தா 10000 ரூபா

கழகத்தில் 150 அங்கத்தவர்கள் உறுப்புரிமை பெற்றிருப்பதுடன் அற்கத்தவர் ஒருவருக்கு ஆண்டு சந்தா 1000 ரூபா 12 அங்கத்தவர்கள் 2017 / 2018 இற்கான ஆண்டுச் சந்தாவைச் செலுத்தி இருந்தனர். 05 அங்கத்தவர்கள் 2015 / 2016 இ 2016 / 2017 இற்குரிய சந்தாப் பணத்தை செலுத்தவில்லை. கழகம் இவர்களது உறுப்புரிமையை ரத்துச் செய்ய தீர்மானித்து

2016 / 2017 இல் வசூலித்த சந்தா தொகை யாது?..........................................................................................

(22) உற்பத்தி நிறுவனம் ஒன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியை கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கலானவை அதிகரிக்கும், குறைக்கும், மாற்றமில்லை என்பதனை குறிப்பிடுக.

| | அதிகரிப்பு | குறைவு | மாற்றம் இல்லை |
|---|---|---|---|
| 1) பாவித்த இயந்திரத்தை விற்பனை செய்தல் | ...................... | .................... | ..................... |
| 2) பொருட்கள் கடனிற்கு விற்பனை செய்தல் | ...................... | .................... | ..................... |
| 3) பொருட்கள் உட்திருப்பப்படுதல் | ...................... | .................... | ..................... |
| 4) வருட முடிவில் ஐயக்கடனிற்கு ஏற்பாடு செய்தல் | ...................... | .................... | ..................... |

(23) கம்பனி ஒன்று தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எந்த எண்ணக்கரு பின்பற்றப்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிடுக.

1) காணியினை அதனைப் பெற்றுக் கொண்ட விலையில் அறிக்கையிடல்..............................................

2) இயந்திரத்தினை அதனைப் பயன்படுத்தும் காலத்திற்கு பெறுமானத்தேய்வினை இனம் காணல்

.....................................................................................................................................................

3) 5000 ரூபாவிற்கு குறைவான எல்லாச் சொத்துக்களும் செலவாக இனம் காணல்

.....................................................................................................................................................

4) சரக்கிருப்பை மதிப்பீடு செய்வதற்காக நிறையளித்த சராசரி முறையை தொடர்ந்து பயன்படுத்தல்

.....................................................................................................................................................

(24) பின்வரும் ஒவ்வொரு உருப்படியும் நிதிக்கூற்றுக்களில் எந்த மூலமாக இனம் காணப்படுகின்றது என்பதனைக் குறிப்பிடுக.

1) விற்பனை, வருமதி .......................................................................................................

2) வட்டி.......................................................................................................................

3) தளபாடவிற்பனை நட்டம்.....................................................................................................

4) பெறுமானத்தேய்வேற்பாடு...................................................................................................

(25) சொத்து ஒன்றின் பண்புகள் 3 தருக.

1) ..........................................................................................................................

2) ..........................................................................................................................

3) ..........................................................................................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை - 2017

## Term Examination, July - 2017

FWC

| தரம் :- 12 (2018) | கணக்கீடு – II | |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- முதலாம் வினாவுக்கும் ஏனைய மூன்று வினாக்களிற்கும் விடை தருக.

(1) அருணாவும் வருணாவும் இலாபநட்டங்களை 3 : 1 எனப் பகிரும் மோட்டார் வாகன உதிரிப்பாகம் இறக்குமதி செய்து விற்பனை செய்யும் பங்குடமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். 01.04.2016 இல் விற்பனை முகாமையாளரான சரண் என்பவரை பங்காளாராக இணைத்துக் கொண்டனர். புதிய இலாபநட்டப் பகிர்வு விகிதம் 3 : 1 : 1 ஆகும். சரண் தனது மூலதனப் பங்காக 100, 00 , 000 ரூபாவைச் செலுத்தி இருந்தார். அவரது இணைப்பின் பின் பங்குடமை ஒப்பந்தம் பின் வருமாறு இருந்தது.

அ) நன்மதி 200, 00, 000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது. நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்கள் யாவும் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

ஆ) சரணுக்கு சம்பளமாக மாதாந்தம் 50000 ரூபா செலுத்தப்பட்டு வந்தது இந்த சம்பளத்தை தொடர்ந்து சரணுக்கு செலுத்தவும் இணங்கப்பட்டது.

இ) பங்காளர் மூலதனத்திற்கு 10 வீத வட்டி வழங்கப்படும்.

31.03.2017 பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| பங்காளர் மூலதனம் அருண் | | 30000 |
| வருண் | | 10000 |
| சரண் பங்களிப்பு | | 10000 |
| காணி | 22000 | |
| கட்டிடம் | 13000 | |
| மோட்டார் வாகனம் | 18000 | |
| திண்ட தேய்வு ஏற்பாடு 01.04.2016 கட்டிடம் | | 1200 |
| மோட்டார் | | 4600 |
| வியாபார வருமதியாளர், சென்மதியாளர் | 18250 | 1430 |
| விற்பனை | | 48400 |
| விற்பனைக் கிரயம் | 16600 | |
| தொக்கு 31.03.2017 | 4100 | |
| விற்பனை விநியோகச் செலவு | 8200 | |
| நிர்வாகச் செலவு | 5350 | |
| நிதிக்கிரயம் | 1400 | |
| நீண்டகாலக்கடன் | | 5000 |
| காப்புறுதி | 800 | |
| காசும் காசிற்கு சமமானவையும் | 4350 | |
| சம்பளம் | 3280 | |
| பங்காளர் சம்பளம் சரண் | 150 | |
| பங்காளர் நடைமுறைக்கணக்கு அருண் | | 3800 |
| வருண் | | 2200 |
| அறவிடமுடியாக்கடன் | 1150 | |
| | 116630 | 116630 |

பின்வரும் மேலதிக தகவல்களை கருத்திற்கொள்க.

(1) 31.03.2017 இருந்த இருப்புக்களுள் 50000 ரூபா இருப்பு பழுதடைந்து இருந்தன. இதன் தேறக்கூடிய பெறுமதி 40000 ரூபா என எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) தேய்மானம் நேர்கோட்டு முறையில் பின்வருமாறு மேற்கொள்ளப்பட வேண்டும் கட்டிடம் 5% மோட்டார் 10%

(3) 31.03.2017 இல் உள்ள கடன்பட்டோர் மீதியில் ஐயக்கடன் ஏற்பாட்டை 10 வீதத்திற்கு சீராக்குக.

(4) 31.03.2017 பின்வரும் செலவுகள் அட்டுறுவாக இருந்தது
நிர்வாகச் செலவு 600000 ரூபா விற்பனை விநியோகச் செலவு 350000ரூபா

(5) காப்புறுதி என்பதனுள் 2017 / 2018 இற்கு செலுத்தப்பட்ட 250, 000 ரூபாவும் உள்ளடங்கியுள்ளது.
தயாரிக்குக.

1) 31.03.2017 முடிவுற்ற ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று

2) பங்காளர் நடைமுறைக்கணக்கு

3) 31.03.2017 இல் உள்ளவாறான பங்குடமையின் நிதிநிலமைக்கூற்று

(2) கிறீன் PLC இன் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பேரேட்டுக்கணக்கு எழுதுவினைஞர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டது. 2017 மார்ச் 31 இல் அவர் தயாரித்த பரீட்சை மீதி இணங்கவில்லை. பின்னர் மேற்க்கொண்ட பரிசீலனையின் போது கீழ் வருவன வெளிக்கொணரப்பட்டது.

1) கம்பனியின் இயற்திரத்திருத்தம் 60000 ரூபா இயந்திரக்கணக்கில் பதிவு செய்யப்பட்டது

2) வாடிக்கையாளர் ஒருவருக்க வழங்கிய விற்பனைப் பட்டியல் முதன்மைப்பதிவேட்டில் 90000ரூ குறைவாகப் பதியப்பட்டது.

3) வாடிக்கையாளர் ஒருவரின் செலவுக் குறிப்பு 40000 ரூபா வாடிக்கையாளர் கணக்கில் வரவில் பதியப்பட்டு உட்திரும்பல் கணக்கில் செலவில் பதியப்பட்டது.

4) கம்பனி அடுத்த ஆண்டில் 350000 பெறுமதியான கொள்வனவை மேற்கொள்வதற்காக வழக்கறிஞர் ஒருவருடன் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்தி முற்பணமாக 50000 ரூபாவை செலுத்தியது. இதனைனப் பதிவு செய்கையில் கொள்வனவுக் கணக்கு 350000 ரூபாவினால் வரவுப்பதிவு செய்யப்பட்டு காசேட்டிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் முறையே 50000ரூ 300000 ரூபா செலவுப் பதிவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

5) 2017 மார்ச் 31 மின்கட்டண செலவில் முற்பணக்கொடுப்பனவு 9000 ரூபாவை உள்ளடக்கியுள்ளது செம்மையாக்கல் பதிவு மேற்கொள்ளப்பட்ட போது முற்கொடுப்பனவுக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டதை தவிர வேறு எப்பதிவும் செய்யப்படவில்லை.

6) குறித்த ஆண்டில் வாடகை வருமானமாக பெறப்பட்ட 230000 ரூபா தவறுதலாக பரீட்சை மீதியின் வரவுப் பக்கத்தில் 320000 ரூபா எனப் பதிவு செய்யப்பட்டு இருந்தது. நீர் செய்ய வேண்டியது.

1) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

2) தொங்கல் கணக்கு

(3) 01.04.2017 இல் ஸ்ரீபன் 500000 ரூபாவை மூலதனமாக இட்டு புடவை வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார்.வியாபாரத்தின் பாவனைக்காக 300000 ரூபா மோட்டார் வாகனத்தினையும் கொண்டு வந்தார். அவர் வியாபாரத்தின் பெயரிர் வங்கிக்கணக்கொன்றை ஆரம்பித்து எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கலையும் வங்கிக் கணக்கின் மூலம் மேற்க் கொண்டார். அம் மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

1) புடவைகள் 200000 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டது
2) 100000 ரூபா கிரயமான புடவைகள் 150000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது
3) புடவைகள் கடனிற் கொள்வனவு 35000 ரூபா
4) 10000 ரூபா கிரயமான புடவைகள் மாதிரிக்கு ஒவ்வாததாக இருந்தமையால் திருப்பி அனுப்பப்பட்டது.
5) தளபாடம் ஒன்று 60000 ரூபா கடனிற்கு கொள்வனவு செய்யப்பட்டது. இதன் ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகும்
6) 50000 ரூபா கிரயமான புடவைகள் 75000 ரூபா கடனிற்கு விற்பனை செய்யப்பட்டது
7) வாடகை செலுத்தியது 15000 ரூபா. இதில் மே மாதத்திற்குரிய 5000 வாடகையும் உள்ளடங்கியுள்ளது.
8) விநியோகத்தர்களும் செலுத்த வேண்டியது 5 வீதம் கழித்துக் கொண்டு செலுத்தப்பட்டது.
9) மாத இறுதியில் உள்ள கடன்பட்டோர் மீதியின் மீது 5 வீதம் ஐயக்கடன் ஏற்பாடு செய்க.
10) அம் மாதத்திற்கான மின்சாரப் பட்டியல் 4000 ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை கீழ்வரும் சமன்பாட்டின் கீழ் பதிக.

1) மூலதனம் + வருமானம் + பொறுப்பு = சொத்து + செலவுகள்
2) ஏப்ரல் மாதத்திற்குரிய வருமானக் கூற்று

(4) அருணா ரேடர்ஸ் 01.04. 2016 இல் 500000 ரூபாவை முலதனமாக இட்டு வியாபாரத்தை ஆரம்பித்தது. நிறுவனம் இரட்டைப் பதிவு அடிப்படையில் உரிய கணக்கோடுகளைப் பேணவில்லை. எனினும் 2017 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அ. வங்கிக்கணக்கின் தொகுப்பு வருமாறு

| | |
|---|---|
| **காசுப்பெறுவனவுகள்** | |
| வைப்புச் செய்யப்பட்டவை | 1800,000 |
| **காசுக் கொடுப்பனவுகள்** | |
| செலுத்தி செலவுகள் | 300,000 |
| கொள்வனவுகள் | 450,000 |
| வங்கிக்கட்டணம் | 2500 |
| உபகரணம் கொள்வனவு (1.4.2016) | 400,000 |
| உபகரணம் கொள்வனவு (1.7.2016) | 200,000 |
| 31.03.2017 மீதி | 447500 |

31.03.2017 இல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளோ தேறாத வைப்புக்களோ இருக்கவில்லை.

ஆ) நிறுவனத்தின் ஒரே வருமானம் விற்பனையில் இருந்து பெறப்பட்டதாகும். கீழ் வருவன நீங்கலாக விற்பனையில் இருந்து கிடைத்த தொகை மற்றும் மூலதன முதலீடு எல்லாம் எல்லாம் வங்கியில்

| | |
|---|---|
| வைப்புச் செய்யப்பட்டன. | |
| உரிமையாளர் பண எடுப்பனவு | 25000 ரூபா |
| கோவிலுக்கு அன்பளிப்பு | 10000 ரூபா |
| பொருள் வழங்குனருக்கு காசுக் கொடுப்பனவு | 35000 ரூபா |
| சில்லறைக் காசாக எடுக்கப்பட்ட தொகை | 50000 ரூபா |

இ) ஆண்டின் இறுதியில் சொத்துக்களும் பரிப்புக்களும் வருமாறு

| | | |
|---|---|---|
| சில்லறைக் காசு | 2500 | ரூபா |
| கடன்பட்டோர் | 130000 | ரூபா |
| தொக்குகள் | 15000 | ரூபா |
| சென்மதி சேவைக் கட்டணங்கள் | 75000 | ரூபா |
| கடன்கொடுத்தோர் | 95000 | ரூபா |

ஈ) மோட்டார் வாகனம் மற்றும் உபகரணங்கள் ஆண்டுக்கு (கிரயத்தில்) முறையே 20% 10% பெறுமானத்தேய்வு செய்யப்படும்

உ) 30.03.2017 இல் 45000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொக்கு கணக்கெடுப்பின் போது கிடைத்திருக்காமையினால் தொக்கு மீதியில் உட்படுத்தப்படவில்லை.

ஊ) உரிமையாளரின் வாகனம் 01.04.2017 இல் வியாபாரத்திற்கு கொடுக்கப்பட்டது. இந்த வாகனத்தின் சந்தைப் பெறுமதி 700000 ரூபாவாகும்

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

1) 31.03.2017 முடிவுற்ற ஆண்டிற்கான சுந்தரம் ரேடர்ஸின் வருமானக்கூற்று

2) 31.03.2017 இல் நிதிநிலமைக்கூற்று

(5) கீழே தரப்பட்டுள்ள விபரங்கள் பியகம் கிராமோதய சங்கத்தின் 2016 டிசெம்பர் 31ம் திகதி முடிவுற்ற ஆண்டிற்குரியதாகும்.

**கொள்ளல் கொடுத்தல் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| 2016. 01 இல் காசு மீதி | 105000 | அன்பளிப்புக்கள் | 2300 |
| அன்பளிப்புக்கள் | 5640 | மின்கட்டணம் | 3100 |
| கைவினைப்பொருட்கள் விற்பனை | 3450 | காகிதாதிகள் | 800 |
| வாடகை வருமான | 12500 | காப்புறுதி | 4500 |
| பல்லினப் பெறுவனவுகள் | 1230 | கதிரைகள் கொள்வனவு | 95800 |
| சந்தாப் பெறுவனவுகள் | 89720 | பிரயாணச் செலவு | 2900 |
| | | பல்லினச்செலவு | 1720 |
| | | 31.12.2016 மீதி | 106420 |
| | 217540 | | 217540 |

கீழ்வரும் மேலதிக தகல்கள் தரப்பட்டுள்ளன.

1) சந்தாப்பணம்

ஆண்டின் போது பெறப்பட்ட சந்தாப்பணம் 2017 ம் ஆண்டிற்காக பெறப்பட்ட 5600 ரூபாவையும் உள்ளடக்குகின்றது.

2015 ஆண்டு தொடர்பில் வருமதியாக இருந்த சந்தாப்பணம் 3800 ரூபா 2016ம் ஆண்டு பெறப்பட்டது.எனின் 2015 தொடர்பில் 1000 ரூபா சந்தாப்பணம் இன்னும் வருமதியாக உள்ளது.

2016 ம் ஆண்டிற்குரிய சந்தாப்பணம் 1700 ரூபா 2015 ம் ஆண்டில் பெறப்பட்டது.

2016ம் ஆண்டிற்காக நிலுவையில் இருந்த சந்தாப்பணம் 7000 ரூபா

2) கதிரைகளின் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகள் ஆகும். இந்தக் கதிரைகள் ஆண்டின் ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்டன.

3) இந்த ஆண்டிற்கான கதிரை வாடகையிலிருந்தான வருமானம் 4000 ரூபா 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை பெறப்படவில்லை.

4) இந்த ஆண்டில் பெற்ற வாடகை வருமானம் 2015 ஆம் ஆண்டிற்கான 2500 ரூபாவை உள்ளடக்குகின்றது.

நீர் தயாரிக்க வேண்டியது

1) 2016 டிசெம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்கான கிராமோதய சங்கத்தின் வருமான செலவுக்கூற்று

2) சந்தாக்கணக்கு